


## பயணிக்கும் படகிலேயே ஓட்டை போட்டு விடுவார்கள்

# ஒரே இரவில் அணி மாறி முதுகில் குத்திய நன்றி கெட்டவர்கள்: காங்கிரஸ் மீது தி.மு.க. பாய்ச்சல்

சென்னை, மே.24

**நம்பியவர்களுக்கெல்லாம் துரோகம் இழைக்கும் முதுகில் குத்திய காங்கிரஸ் கட்சிக்கு வன்மையான கண்டனம் என்றும், பயணிக்கும் படகிலேயே ஓட்டை போடும் அறிவாளிகள்தான் காங்கிரஸ் கட்சியினர் என்றும் தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

தி.மு.க. இளைஞர் அணி மாநில அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கத்தில் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது. தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

### புதிய கூட்டாளிக்கும் துரோகம் செய்வார்கள்

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தி.மு.க. மீதும், தலைவர் மு.க.ஸ்டாலின் மீதும் நம்பிக்கை வைத்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

கடந்த பல தேர்தல்களிலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் போட்டியிட்டு பல சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றது காங்கிரஸ் கட்சி. நடந்து முடிந்த தேர்தலிலும் தி.மு.க.வினரின் உழைப்பினால் 5 சட்டமன்ற உறுப்பினர்களை வென்றனர். தேர்தலுக்கு முன்பாகவே தி.மு.க. உறுப்பினர்களின் வாக்குகளால் மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் பெற்றனர்.

நன்றி கெட்டவர்கள்

இத்தனையும் பெற்றுக்கொண்டு, ஒரு நன்றி கூட சொல்லாமல், நன்றி உணர்ச்சியும் இல்லாமல் ஒரே இரவில் அணி மாறிச் சென்றிருக்கின்றனர். அடுத்தவர் உழைப்பில் ஒட்டுண்ணியாய் உண்டு கொழுப்பதும், தன் தேவைக்கேற்ப கொள்கை மறந்து துரோகம் புரிவதும் காங்கிரசுக்கு புதி தில்லை தான். இன்று நமக்கு செய்த துரோகத்தை, நாளை பதவி கொடுத்த புதிய கூட்டாளிக்கும் செய்வார்கள். பயணிக்கும் படகிலேயே ஓட்டை போடும் அறிவாளிகள்தான் காங்கிரஸ் கட்சியினர்.

தி.மு.க. ஆட்சியமைக்க வேண்டும் என விரும்பிய மக்களின் வாக்குகளால்தான் இன்று அவர்கள் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளார்களே தவிர. இது அவர்கள் தங்கள் சொந்தச் செல்வாக்கினால் பெற்ற வெற்றியல்ல என்பதைக்கூட உணராமல், வரலாறு படைத்து விட்டதாக உளறுகிறார்கள். சொந்த உழைப்பில் ஒருநாளும் வெற்றி பெற முடியாமல், நம்பியவர்களுக்கெல்லாம் துரோகம் இழைக்கும் அறமில்லாத முதுகில் குத்தும் காங்கிரஸ் கட்சிக்கு இந்தக் கூட்டம் தனது வன்மையான கண்டனத்தைப் பதிவு செய்கிறது.

புதிய அரசு பொறுப்பேற்ற 13 நாட்களிலேயே கோவையில் 10 வயது சிறுமி கடத்தி காட்டுமிராண்டித் தனமாக கொலை செய்யப்பட்டுள்ளதுடன் 30க்கும் மேற்பட்ட கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் நிகழ்ந்து இன்று தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு தறிகெட்ட செய்திகள் வருகின்றன. ஆனால், முதலமைச்சர் கோட்டை கழற்றினார். கூலிங் கிளாஸ் போட்டார், பொலிரோ கார் ஓட்டிப்பார்த்தார். பேட்டரி காரில் பவனி வந்தார் என்ற ரீல்ஸ்களால் இவற்றை திசை திருப்ப பார்க்கிறார்கள்.

இந்த வெற்று விளம்பர நடவடிக்கைகளுக்கு பதிலாக முதலமைச்சர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து மக்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும் எனவும், ரீல் ஆட்சியை நிறுத்தி, ரியல் நிர்வாகத்தை வழங்க வேண்டும் எனவும் தி.மு.க. இளைஞர் அணியின் நிர்வாகிகள் கூட்டம் வலியுறுத்துகிறது என்பது உள்ளிட்ட 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### 5 ஆண்டு நீடிக்காது: ஸ்டாலின் பேச்சு

சென்னையில் நடந்த தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

தனிப்பட்ட ஒருவரின் தோல்வியை விட கட்சியின் தோல்விதான் பெரியது. நான் அதற்குதான் வருத்தப்படுகிறேன். இப்போது நடந்திருப்பது அரசியல் சுனாமி அல்ல.

சினிமா சுனாமிதான். அதுவும் பெரும்பான்மை பெற்று அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. நமது கூட்டணி கட்சிகளின் துணையோடுதான் ஆட்சி புரிகிறார்கள். நிச்சயமாக இந்த ஆட்சி 5 ஆண்டு காலம் நீடிக்கும் ஆட்சி அல்ல. ஜனநாயக முறையில் மக்கள் அளித்த தீர்ப்பு சினிமா கவர்ச்சிக்கு சாதகமாக அமைந்திருக்கிறது என்பதுதான் உண்மை என்றார்.

### உதயநிதி பேச்சு

கூட்டத்தில் தி.மு.க. இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பெரும்பான்மை இடங்கள் கிடைக்காமல் நமது கூட்டணியில் உள்ள கட்சிகளின் தயவால்தான் இந்த ஆட்சி அமைந்துள்ளது. நம்ம கூட்டணியில் உள்ள சில கட்சிகள் நம்ம தலைவரிடம் வந்து தலைவரின் உத்தரவை பெற்று, அனுமதியை பெற்று ஆளும் கட்சிக்கு ஆதரவு கொடுத்தார்கள். ஆனால் 20 வருடத்திற்கு மேல் நமது முதுகு மேல் ஏறி நின்று சவாரி செய்த காங்கிரஸ் கட்சி இன்று நம் முதுகில் குத்திவிட்டு போயிருக்கிறது. இதை யாரும் மறந்துவிடாதீர்கள்.

இந்தியாவில் பா.ஜ.க.வின் தொடர் வெற்றிக்கு மோடியும், அமித்ஷாவும்தான் காரணம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால், காங்கிரஸ் கட்சிதான் பா.ஜ.க.வின் தொடர் வெற்றிக்கு காரணம் என்பது இப்போதுதான் தெரிகிறது. அப்படிப்பட்ட காங்கிரசை நம்முடைய தலைவர்கள்தான் தோளில் சுமந்து கடத்தினார்கள்.

நாடாளுமன்ற தேர்தல், சட்டமன்ற தேர்தலில் மதச்சார்பின்மையை பாதுகாக்க வேண்டும். பா.ஜ.க.வை தமிழ்நாட்டுக்குள் விட்டுவிடக்கூடாது என்று தி.மு.க. தொண்டர்கள் வியர்வையையும், ரத்தத்தையும் சிந்தி காங்கிரஸ் வேட்பாளர்களை வெற்றிபெற வைத்து இருக்கிறோம். இந்த தேர்தலிலும் அதைத்தான் செய்தோம். களத்திலேயே இல்லாத காங்கிரஸ் கட்சி 5 இடங்களில் ஜெயிக்க நம்முடைய உழைப்புதான் காரணம்.

நம்ம தலைவர் முதலமைச்சராக வேண்டும் என்று மக்கள் போட்டுள்ள ஓட்டில் வெற்றி பெற்றுள்ள காங்கிரஸ் பதவிக்காக சொல்லாமல் கொள்ளாமல் ஓடி போய்விட்டார்கள். குறைந்தபட்ச நன்றியோ, நாகரிகமோ இல்லாத காங்கிரசை இனி எந்த காலத்திலும் நாம் நம்பப்போவது இல்லை. அவர்களுக்கு சரியான பாடத்தை நாம் கற்றுக்கொடுக்கிறோமோ இல்லையோ, தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் கற்றுக்கொடுப்பார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

# பஸ்சில் பயணம் செய்து மக்களின் குறை கேட்டார் அமைச்சர் தமிழன் பார்த்திபன்



சென்னை, மே 24–

**போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன் சைதாப்பேட்டை முதல் கிண்டி ரேஸ்கோர்ஸ் பேருந்து நிறுத்தம் வரை அரசுப் பேருந்தில் பொதுமக்களுடன் பயணித்து, கிண்டி ரேஸ்கோர்ஸ் பேருந்து நிறுத்தத்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் ஆகியோரிடம் கலந்துரையாடினார். மேலும் வேளச்சேரி அரசு மத்திய தானியங்கி பணிமனை இயக்குநர் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.**

அமைச்சர் விஜய் தமிழன் பார்த்திபன் கடந்த 22–ந் தேதி அன்று சைதாப்பேட்டை பேருந்து நிறுத்தத்திலிருந்து கிண்டி ரேஸ் கோர்ஸ் பேருந்து நிறுத்தம் வழியாகச் செல்லும் மாநகரப் போக்குவரத்து கழகப் பேருந்தில் ஏறி முறையான பயணச்சீட்டு பெற்று, பொதுமக்களுடன் பயணித்து, அவர்களுடன் நேரடியாக கலந்துரையாடி, அரசு பேருந்துகளில் பயணிகளுக்காக செய்யப்பட்டுள்ள வசதிகள் மற்றும் பயணத்தில் ஏற்படும் இடர்பாடுகள் உள்ளனவா என்பது குறித்தும் கேட்டறிந்து, இடர்பாடுகள் ஏதேனும் இருப்பின் உடனடியாக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று அதனை உடனடியாகக் களைவதாக உறுதியளித்தார்.

மேலும், அப்பேருந்தில் ஓட்டுநர் மற்றும் நடத்துநரிடமும், அவர்களுக்கு பணிசெய்வதில் ஏதேனும் இடர்பாடுகள் உள்ளனவா என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

### பயணிகளிடம் குறை கேட்டார்

அதனைத் தொடர்ந்து, அமைச்சர் கிண்டி ரேஸ்கோர்ஸ் பேருந்து நிறுத்தத்தில், பேருந்துக்காக காத்திருந்த பொது மக்களிடம் கலந்துரையாடி, பேருந்துகள் உரிய நேரத்தில் வருவது குறித்தும், தாங்கள் செல்ல வேண்டிய வழித்தடங்களுக்கு போதிய அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றனவா என்பது குறித்தும், கேட்டறிந்தார்.

பொது மக்கள் தெரிவித்த கருத்துக்களை கவனமுடன் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாகவும், மேலும், நேரக்காப்பாளர், நடத்துநர் மற்றும் ஓட்டுநர் ஆகியோருடனும் கலந்துரையாடி அவர்களுக்கு பணிசெய்வதில் ஏதேனும் இடர்பாடுகள் உள்ளனவா என்பது குறித்து கேட்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகத் தெரிவித்தார்.



# மாணவர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகம், சீருடைகள்: அமைச்சர் ராஜ்மோகன் நேரில் ஆய்வு

சென்னை, மே 24–

**பள்ளிக்கல்வி துறை அமைச்சர் ராஜ்மோகன், 2026–2027–ம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள பாடப் புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சீருடைகள், புத்தகப்பைகள் உள்ளிட்ட விலையில்லா நலத்திட்ட பொருட்களை சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யும் பணியினை நேரில் சென்று ஆய்வு செய்தார்.**

சென்னை, சிந்தாதிரிபேட்டை கல்யாணம் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் அமைச்சர் ராஜ்மோகன், 2026–27ம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், புத்தகப்பைகள் உள்ளிட்ட விலையில்லா நலத்திட்ட பொருட்களை பள்ளிக்கு நேரடியாக விநியோகம் செய்யும் பணியினை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகை பள்ளிகளும் ஜூன் 1–ந் தேதி திறக்கப்பட உள்ளது. இதனைத் தொடர்ந்து 2026–2027–ம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள், புத்தகப்பைகள் உள்ளிட்ட நலத்திட்ட பொருட்கள் அனைத்து மாவட்ட மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாவட்ட மையங்களில் இருந்து பள்ளிகளுக்கு நேரடியாக நலத்திட்ட பொருட்களை வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

வருகின்ற ஜூன் 1–ம் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ள நாளில் 2026–2027–ம் கல்வியாண்டில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள அனைத்து விலையில்லா நலத்திட்ட பொருட்களும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பள்ளிக்கல்வி அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார். உடன் பள்ளிக் கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கபிர் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.


## பெயர் மாற்றம்

OLD NAME :- RASHEED KHAN ASGHAR KHAN, தந்தை பெயர்: Abdul Rasheed Khan, பிறந்த தேதி: 12/06/1968, ADDRESS: No.55, Thiruvalluvar Street, Kamarajapuram, Pattabiram, Chennai – 600072, Tamilnadu. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NEW NAME : ABDUL RASHEED KHAN ASGHAR KHAN** என்று அழைக்கப்படுகிறேன்.

OLD NAME :- RASHEED KHAN ASGHAR KHAN

## பெயர் மாற்றம்

Old Name : HUSENKHAN ILIYAKHAN, தந்தை பெயர்: HUSENKHAN, பிறந்த தேதி: 10.05.1969, Address: No 39 9 JO Homes Avvaithiru Nagar 3rd Street, Virugambakkam, Chennai - 600092. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Name: HUSENKHAN YAHAYAKHAN**

என்று அழைக்கப்படுகிறேன்.

Old Name : HUSENKHAN ILIYAKHAN

## பெயர் மாற்றம்

Old Surname: Namasivayamaheswaran, Old Given Name: Umamaheswari, தந்தை பெயர்: Arumugam, பிறந்த தேதி: 20.05.1968, Address: Flat No. 110, Ramaniyam Anugraha Apt, 3rd Avenue, Ashok Nagar, Chennai – 600083, Tamilnadu, India. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Surname: ARUMUGAM, New Given Name: UMAMAHESWARI,** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname: Namasivayamaheswaran,
Old Given Name: Umamaheswari

## பெயர் மாற்றம்

Old Surname: PRABAKARAN Old Given Name: DEEPTHIMOL, கணவர் பெயர்: RAJESH , பிறந்த தேதி: 06/06/1998, Address: 3/655, 2nd Street, Annai Avenue, VGP Avenue EXTN, Mettukuppam, Oggiyam Thuraipakkam, Chennai – 600097. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New name : DEEPTHIMOL** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname: PRABAKARAN
Old Given Name: DEEPTHIMOL

## பெயர் மாற்றம்

SHIFANA AAISHA MOHAMED MAIDEEN, கணவர் பெயர்: Mohamed Aashiq Mehaboob, பிறந்த தேதி: 17.08.2004, Address: NO.27/8, J.D. Durai Raj Nagar, 9th Street, Aminjikarai, Chennai-600029. என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHIFANA AAISHA MOHAMED MYDEEN**

என்று அழைக்கப்படுகிறேன்.

SHIFANA AAISHA MOHAMED MAIDEEN

## பெயர் மாற்றம்

VANATHI KRISHNAMOORTHY, கணவர் பெயர்: BHUVANA CHANDAR, பிறந்த தேதி: 04/06/1981, ADDRESS: NO.56/18, UJJINI STREET, AYANAVARAM, CHENNAI - 600023, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **VANATHI BHUVANA CHANDAR,** என்று அழைக்கப்படுகிறேன்.

VANATHI KRISHNAMOORTHY

## பெயர் மாற்றம்

Old Surname: RAJENDRAN, Old Given Name: PRIYANKA, கணவர் பெயர்: ANAND, பிறந்த தேதி: 19.01.1988, Address: 9A, Subramani Nagar 1st Street, Poompuhar Nagar, Kolathur, Chennai – 600099, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **New Given Name: PRIYANKA, New Surname: VEDACHALAM RAJENDRAN** என்று அழைக்கப்படுகிறேன்.

Old Surname: RAJENDRAN,
Old Given Name: PRIYANKA

## பெயர் மாற்றம்

I, ASHOK KUMAR EDIGA, S/O. EDIGA CHANDRA SEKHAR, Residency at Plot No.84 and 85 Flat No.B2, Second Floor, Kumaran Kudil 5th Street, Mettukuppam, Oggiam, Thuraipakkam, Chennai Pincode – 600 097. Changed My Minor Daughter's Name : Old Given Name: THEJITHA Old Sur Name: EDIGA, DATE OF BIRTH: 14.09.2018.

**New Given Name : THEJITHA ASHOK , New Sur Name : EDIGA.**

## பெயர் மாற்றம்

I, AMEER KHAN, S/O. TAHIR ALI KHAN, Residency at No.22C, Lakshmi Apartment, Kulakkarai 2nd Street, West Tambaram, Chengalpattu, Pincode – 600 045. Changed My Minor Daughter's Name : Old Given Name: AZRA SHAMMU, Old Sur Name: ....., DATE OF BIRTH: 28.04.2023.

**New Given Name : AZRA SHAMMU, New Sur Name : AMEER KHAN.**


## அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்

பதிவு அலுவலகம் : பழைய எண்.11, புதிய எண்.2, பார்த்தசாரதிபுரம், 2வது தெரு, தி. நகர், சென்னை – 600 017.

Phone No. 044-4953 0954 | E-Mail ID: abicompliance@afslindia.in | website: www.afslindia.in | CIN: L65993TN1993PLC024861

### 31 மார்ச் 2026ல் முடிந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள்

| விவரங்கள் | மார்ச் 31, 2026 முடிந்த 3 மாதங்கள் (தணிக்கை செய்தது) | டிசம்பர் 31, 2025 முடிந்த முந்தைய 3 மாதங்கள் (தணிக்கை செய்யாதது) | மார்ச் 31, 2025 முடிந்த இதே 3 மாதங்கள் (தணிக்கை செய்தது) | மார்ச் 31, 2026 முடிந்த ஆண்டு (தணிக்கை செய்தது) | மார்ச் 31, 2025 முடிந்த ஆண்டு (தணிக்கை செய்தது) |
|---|---|---|---|---|---|
| 1. (a) செயல்பாடுகள் மூலம் வருமானம் | - | | | | - |
| 2. (a) இதர வருமானம் | 30.92 | 33.67 | 31.44 | 133.30 | 144.62 |
| 3. மொத்த வருமானம் (1+2) | 30.92 | 33.67 | 31.44 | 133.30 | 144.62 |
| 4. செலவினம் | | | | | |
| மூலதனப் பொருட்கள் உபயோக செலவு | - | - | - | - | - |
| வர்த்தகத்தில் பங்கு கொள்முதல் | - | - | - | - | - |
| மூலப்பொருளின் சரக்குகளில் மாற்றங்கள் | - | - | - | - | - |
| ஊழியர் செலவினம் | 6.36 | 7.47 | 6.30 | 27.09 | 26.36 |
| நிதி செலவு | 0.01 | 0.03 | 0.00 | 0.09 | 0.52 |
| தேய்மானம் | 0.12 | 0.08 | 0.14 | 0.36 | 0.50 |
| இதர செலவினம் | 9.51 | 11.27 | 9.01 | 38.53 | 36.82 |
| மொத்த செலவுகள் | 16.00 | 18.85 | 15.45 | 66.07 | 64.20 |
| 4. வரி மற்றும் விதிவிலாக்கான பொருட்களுக்கு முன் லாபம்/(நஷ்டம்) (3–4) | 14.92 | 14.82 | 15.99 | 67.23 | 80.42 |
| 5. விதிவிலக்கான பொருட்கள் | - | - | - | - | - |
| 6. வரிக்கு முன் லாபம்/(நஷ்டம் ( 4 - 5 ) | 14.92 | 14.82 | 15.99 | 67.23 | 80.42 |
| 7. வரி செலவுகள் | | | | | |
| நடப்பு வரி | 2.87 | 3.80 | 5.00 | 17.27 | 20.00 |
| நடப்பு வரி சரி செய்யப்பட்டது - முந்தைய ஆண்டு | (1.25) | - | - | (1.25) | 2.73 |
| ஒத்திவைக்கப்பட்ட வரி | - | - | - | - | - |
| மொத்த வரி செலவுகள் | 1.62 | 3.80 | 5.00 | 16.02 | 22.73 |
| 8. காலத்திற்கான தொடரும் செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்) (6 - 7) | 13.30 | 11.02 | 10.99 | 51.21 | 57.69 |
| 9. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்) | - | - | - | - | - |
| 10. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளுக்கான வரி செலவுகள் | - | - | - | - | - |
| 11. நிறுத்தப்பட்ட செயல்பாடுகளில் இருந்து லாபம்/(நஷ்டம்)(வரிக்கு பின்) (10 - 11) | - | - | - | - | - |
| 12. காலத்திற்கான லாபம்/(நஷ்டம்) (8+11) | 13.30 | 11.02 | 10.99 | 51.21 | 57.69 |
| 13. இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி | - | - | - | - | - |
| a(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள் | - | - | - | - | - |
| (ii) பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது | - | - | - | - | - |
| b(i) லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாத பொருட்கள் | - | - | - | - | - |
| (ii)பொருட்கள் தொடர்பான வருமான வரி, அது லாபம் அல்லது நஷ்டத்திற்கு மறுவகைப் படுத்தப்படாதது | - | - | - | - | - |
| மொத்த இதர விரிவான வருமானம், நிகர வருமான வரி | - | - | - | - | - |
| 14. மொத்த இதர விரிவான வருமானம்/(நஷ்டம்), நிகர வருமான வரி (13+14) | 13.30 | 11.02 | 10.99 | 51.21 | 57.69 |
| 15. செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு: ஒவ்வொன்றும் ரூ.10/-) | 540.00 | 540.00 | 540.00 | 540.00 | 540.00 |
| 16.ஒரு பங்கு சம்பாத்தியம் (ரூ.)(வருடாந்திரம் அல்ல) அடிப்படை | 0.25 | 0.20 | 0.20 | 0.95 | 1.07 |
| பலமிழந்தது | - | - | - | - | - |

குறிப்பு:

1. 31 மார்ச் 2026ல் முடிந்த காலாண்டிற்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 23 மே, 2026 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
2. 31 மார்ச் 2026ல் முடிந்த காலாண்டிற்கான நிதிநிலை முடிவுகள் தொடர்பாக சட்ட தணிக்கையாளர்களால் வழங்கப்பட்ட அறிக்கை 23 மே, 2026 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டது.
3. எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் கணக்குகள் ரீகுரூப் செய்யப்பட்டு மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
4. முதலீட்டாளர்கள் புகார் : காலாண்டு துவக்கத்தில் நிலுவை - இல்லை. காலாண்டில் பெறப்பட்ட மற்றும் நிவர்த்தி செய்யப்பட்ட புகார்கள் - இல்லை. காலாண்டு முடிவில் நிலுவையில் உள்ள புகார்கள் - இல்லை.
5. 31 மார்ச் 2026ல் முடிந்த காலாண்டிற்கான தனியான ஆஸ்திகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | 31 மார்ச் 2026 அன்று | 31 மார்ச் 2025 அன்று |
|---|---|---|
| **ஆஸ்திகள்** | | |
| **நடப்பு அல்லாத ஆஸ்திகள்** | | |
| சொத்து, ஆலை மற்றும் கருவிகள் | 1.72 | 0.93 |
| முதலீடுகள் | 94.74 | 105.46 |
| இதர நடப்பு அல்லாத ஆஸ்திகள் | 1.71 | 1.72 |
| | 98.17 | 108.11 |
| **நடப்பு ஆஸ்திகள்** | | |
| ரொக்கம் மற்றும் ரொக்கத்திற்கு இணையானது | 1,858.46 | 1,840.88 |
| இதர நடப்பு ஆஸ்திகள் | 46.48 | 78.99 |
| | 1,904.93 | 1,919.87 |
| **மொத்தம் - ஆஸ்திகள்** | **2,003.10** | **2,027.98** |
| **சம மற்றும் பொறுப்புகள்** | | |
| சமம் | | |
| பங்கு மூலதனம் | 540.00 | 540.00 |
| இதர சமம் | 1,414.25 | 1,444.04 |
| | 1,954.25 | 1,984.04 |
| **நடப்பு அல்லாத பொறுப்புகள்** | | |
| கடன்கள் | - | - |
| **நடப்பு பொறுப்புகள்** | | |
| இதர நடப்பு பொறுப்புகள் | 31.59 | 23.93 |
| ஒதுக்கீடுகள் | 17.27 | 20.00 |
| | 48.86 | 43.93 |
| **மொத்த சம மற்றும் பொறுப்புகள்** | **2,003.10** | **2,027.98** |

6. **நிகர லாப நல்லிணக்கம்**

முந்தைய இந்திய ஜிஏஏபிக்கு இணங்க மொத்த நிகர லாபத்தை சமரசம் செய்ததன் மூலம், செபிக்குத் தேவையான முந்தைய ஆண்டின் காலாண்டில் இந்த் ஏஎஸ்க்கு இணங்க மொத்த விரிவான வருமானம் வழங்கப்பட்டுள்ளது:

(ரூ. லட்சத்தில்)

| விவரங்கள் | தனியானது | | |
|---|---|---|---|
| | தணிக்கை செய்தது 31.03.2026 முடிந்த காலாண்டு | தணிக்கை செய்தது 31.03.2025 முடிந்த காலாண்டு | தணிக்கை செய்தது 31.03.2025 முடிந்த ஆண்டு |
| ஜிஏஏபி-ன் படி காலத்திற்கான நிகர லாபம் | 13.30 | 10.99 | 57.69 |
| கழிக்க : | | | |
| இதர விரிவான வருமானத்தில் உண்மையான லாபம்/ (நஷ்டம்). | | | |
| **இந்த் ஏஎஸ்-ன் கீழ் நிகர லாபம் (A)** | **13.30** | **10.99** | **57.69** |
| இதர விரிவான வருமானம் | | | |
| வாங்குதல் தொடர்பான பரிவர்த்தனை செலவு ★ | - | - | - |
| **இதர விரிவான வருமானம் (B)** | - | - | - |
| **இந்த் ஏஎஸ்-ன் கீழ் காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (A+B)** | **13.30** | **10.99** | **57.69** |

இடம் : சென்னை
தேதி : 23.05.2026

அபிராமி பைனான்ஷியல் சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்
ஒப்பம்/-
சித்ரா சிவராமகிருஷ்ணன்
முழு நேர இயக்குனர்
DIN: 00292725